செ.வெ.எண்: 63 நாள்: 22.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சம்பா நெல் சாகுபடி விவசாயிகளை 100 சதவீதம் இணைத்திட அலுவலர்கள் சிறப்பாக பணியாற்றிட வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தினை விரைவுபடுத்தும் வகையில் மாவட்ட அளவிலான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 21.11.2016 அன்று நடைபெற்றது.

இதில் வட்டார வாரியாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இத்திட்டத்தினை ஆய்வு செய்து பேசியதாவது:

நமது மாவட்டத்தில் உள்ள கடன் பெறும் மற்றும் கடன் பெறாத 96000 விவசாயிகளை பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பாண்டு சம்பா நெல் சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளையும் இப்பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைப்பதற்கு தமிழகஅரசால் உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வணிக வங்கிகளுக்கு பொறுப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வேளாண்மைத்துறை களப்பணியாளர்கள் உடன் சம்மந்தப்பட்ட வங்கிக்கிளையினை அணுகி பயிர்க்கடன் மற்றும் விவசாய நகைக்கடன் பெற்றுள்ள விவசாயிகளின் விபரத்தினை பெற்று அவ்விவசாயிகளை இப்பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைத்திடவும், மேலும் அனைத்து வட்டாரங்களைச் சேர்ந்த களப்பணியாளர்களும் சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அனைவரையும் 30.11.2016க்குள் 100 சதவீதம் பயிர்க்காப்பீடு திட்டத்தில் இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.மிருணாளினி, வேளாண்மைத்துறை துணை இயக்குநர் திரு.கந்தசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**